# தமிழரின் வழிபாடுகளில் மரபு நீட்சி

**முனைவர் மு. பாண்டி**
பேராசிரியர் & துறைத்தலைவர்
தமிழ்த்துறை
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி

**மலர்:** 3
**இதழ்:** 4
**மாதம்:** ஏப்ரல்
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

மனிதர்கள் தம் தேவைகளைப் பூர்த்திசெய்ய தேடிக் கொண்டேயிருப்பவர்கள். வாழ்வில் வளர்ச்சி, வசதி, இன்பம் துய்த்தல், உலகமயமாதல், மாறுபட்ட சிந்தனைகள் போன்றவற்றால் மாற்றங்களை எதிர்கொண்டாலும் ஆழ்மனத்தில் பதிந்துள்ள பழையனவும் மரபும் மாறுபடாதவை என்பதை அவர்களின்வழி தொடர் செயல்பாடுகள் பிரதிபலிக்கின்றன. இவற்றில் இன்றைய நவீன வாழ்விலும் வழிபாடுகளில் காணலாகும் மரபு நீட்சியைக் கண்டறிவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### மரபு

தொன்மை, பழமை, மரபு போன்ற சொற்கள் முன்னோர்களின் வாழ்வின் எச்சங்களைக் குறிப்பனவாகும். தமிழர்களின் மரபுகளைத் தொல்காப்பியர் மரபியலில் பதிவு செய்திருப்பது நோக்கத்தக்கது. பொருளதிகாரத்தில் தமிழரின் களவு, கற்பு, கூற்றுகள், தொழில்கள், பெயர்கள், இலக்கண, இலக்கிய மரபுகள் கூறியவர் தெய்வங்கள் அவற்றின் வழிபாட்டு மரபுகளையும் பதிவு செய்துள்ளனர். பண்டைத் தமிழர் ஐவகை நிலங்களில் திணை என்னும் ஒழுக்கம்சார் வாழ்வியலில் உரிப்பொருள்களை முதல், கருப்பொருள்களின் துணையுடன் அமைத்துக் கொண்டவர்கள். கருப்பொருள் சுட்டும்பொழுது தெய்வத்தை முதலாவதாகக் குறிப்பிடுகின்றார்..

**“தெய்வம் உணாவே மா மரம் புள்பறை**
**செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ**
**அவ்வகை பிறவும் கருஎன மொழிப”** **(தொல்.அகத்திணை நூ.964)**

என்பது நூற்பா. இதன்வழித் தெய்வத்திற்கு அக்கால மக்களிடமிருந்த சமூக நிலையையும், மதிப்பையும் அறியலாம்.

இன்றும் ஒரு செயலைத் தொடங்கும்பொழுது அவரவர் குல தெய்வங்களையும், விருப்பத் தெய்வங்களை வணங்கியும் வாழ்த்தியும் தொடங்குவது மரபு. “வழிபாடு வழிபடுவோரின் வாழ்க்கைமுறையில் இருந்து எழுகின்றன. ஒரு சமுதாயம் அதன் உணவு, உடை, உறையுள் ஆகிய புற வாழ்க்கைத் தேவைகளை எந்த முறையில் பெறுகிறதோ, அதற்காக எத்தகைய சமுதாய அமைப்பை உருவாக்கிக் கொண்டுள்ளதோ, அந்த அமைப்பின் அடிப்படையின்மீது தெய்வ நம்பிக்கை என்ற மேற்கோப்பு எழும்

(ஏங்கல்ஸ்)” என்பார் நா. வானமாமலை. (பழங்கதைகளும் பழமொழிகளும், ப.80) வாழ்த்து வகைகளில்,

**“வழிபடு தெய்வம் நிற்புறம் காப்பப்**
**பழிதீர் செல்வமொாடு வழிவழி சிறந்து**
**பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே”** **(தொல்.செய்.நூ.1367)**

என வழிபடு தெய்வமாகிய குலதெய்வம் ஒருவரையும் அவர் குடும்பத்தார், ஊராரையும் குற்றமற்ற செல்வத்துடன் வழிவழிச் சிறந்து பொலிவு பெற வாழ்த்துவது என்கிறார்.

ஒவ்வொரு நிலத்திற்கும் தலைத் தெய்வ வழிபாடு இருந்ததை,

**“மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்**
**சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே”** **(தொல்.அகத்திணை.நூ.951)**

என்னும் நூற்பா தெளிவுபடுத்துகின்றது. இத்தெய்வங்களும் இவற்றிற்குரிய வழிபாடுகளும் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே இருந்து வருவதைப் பல நூற்பாக்கள் ஆங்காங்கே வெளிப்படுத்துகின்றன. “மனித இனமானது இருப்பிடம், உணவு, உடை போன்றவற்றிற்கு இயற்கையைச் சார்ந்திருந்தது. இயற்கை மனிதனுக்கு உதவிய காரணத்தால் தன் நன்றியைத் தெரிவிக்கும்விதமாக மனித இனம் முதன்முதலில் இயற்கையைத் தெய்வமாக வழிபட ஆரம்பித்தது. முன்னோர்களால் தங்களது வாழ்வில் நன்மை, தீமை ஏற்படக்கூடும் என்று எண்ணி அவர்களையும் வழிபடத் தொடங்கினார். மூன்றாவதாக முன்னோர்கள் பயன்படுத்திய கருவிகளையும் வழிபடத் தொடங்கிப் பின்னர் அவர்களுக்காக நடப்பட்டிருக்கும் நடுகல்லையும் வழிபடத் தொடங்கினார்கள். இதுபோல வழிபடும் முறை படிப்படியாக வளர்ச்சிபெற்று கிராமப்புறத் தெய்வங்களை வழிபடும் முறையை அடைந்தது எனலாம்” என்பர் சு.சக்திவேல். (நாட்டுப்புறவியல் ஓர் அறிமுகம், ப.183). அடுத்தடுத்த காலகட்டங்களில் வாழ்ந்த தமிழர்களின் வழிபாடுகள், விரிவாக எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களில் காணக்கிடக்கின்றன.

சிலம்பு, மணிமேகலை, பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் சமயங்களின் வாழ்பாடுகளும், திருமுறைகள், நாலாயிர திவ்வியபிரபந்தங்களில் சைவ, வைணவ வழிபாடுகளும், பிற்காலக் காப்பியங்களிலும் அதனையடுத்து உருவாக்கம் பெற்ற சிற்றிலக்கியங்களிலும், ஏனைய ஒவ்வொரு கால கட்ட இலக்கிய வகைகளிலும் அவ்வக்கால வழிபாடுகள் இடம்பெற்றுள்ளன. சைவ, வைணவ சமய இலக்கியங்களில் அடியார்கள் சிலர் சிறுமரபு தெய்வ வழிபாட்டை ஏற்றுக்கொள்ளாமை காணப்படுகிறது. இது ஆகம விதிகளுக்குட்பட்டு, தத்தம் சமயமே சிறந்தது, அது பாதுகாக்கப்பட வேண்டும், பிற சமயங்களிலிருந்து உயர்ந்தது என்ற மேலாதிக்க மனப்பான்மையின் விளைவுகளாகும்.

## மரபும் நீட்சியும்

மாற்றம் என்பது மானிட தத்துவம். நவீனம், கல்வி, பொருளாதாரம், போலச்செய்தல் போன்ற நிலைகளில் மனிதர்களின் நடவடிக்கைகள் மாற்றங்களுக்கு உட்பட்டுள்ளன. உணவு, உடை, உறைவிடம், தொழில்கள், சடங்குகள் எனப் பலவற்றில் மாற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும் பழமை போற்றுதல், முன்னோர்களை மதித்தல், வேளாண் வழிபாடுகளில் மரபின் நீட்சி எனும் தொடர்ச்சி போற்றுதலுடன் பின்பற்றப்பட்டு வருகின்றது. திணை அடிப்படையிலான தொழில்களின் விளைவுகளால் அவ்வவ் நில மக்கள் தத்தம் மரபுகளுடன் தெய்வங்களை வழிபடுவதைக் காணமுடிகிறது.

மதுரை, தமிழ், தமிழர் வழிபாடுகள், விழாக்கள், பண்பாடு, கலைகள் போன்றவற்றைப் பாதுகாக்கப்படும் இடமாகத் திகழ்கின்றது. சித்திரைத் திருவிழா, ஏறுதழுவுதல் என்னும் சல்லிக்கட்டு மதுரையைச் சுற்றியுள்ள அலங்காநல்லூர், அவனியாபுரம், பாலமேடு போன்ற ஊர்களில் சிறப்பாக வெளிநாட்டினர் பலர் பங்கேற்கும் வகையில் நடத்தப்படுவது இதற்குத் தகுந்த சான்றுகளாகும். மதுரையின் உள்ளும் புறமும் சைவ, வைணவத் தலங்கள் பல இருந்தாலும் இயற்கை வழிபாடும், முன்னோர்களை வழிபடும்முறையும், நாட்டுப்புற வழிபாடும் பெரும்பான்மை மக்களிடம் பெருவழக்காக இருக்கின்றன. கல்வி, பொருளாதாரம், மருத்துவத் துறைகளில் வளர்ச்சிபெற்று வரும் மாநகரமாக இருந்தபோதிலும் அதைப் ~பெரிய கிராமம்| என்ற சிறப்புடன் சுட்டுகின்றனர். மதுரையிலும் அதன் சுற்றுப்பகுதியிலும் நடைபெறும் வழிபாட்டுத் தரவுகள் வழித் தமிழர் வழிபாட்டு மரபுகள் இங்கு நோக்கப்படுகின்றன.

### சிறுதெய்வ வழிபாடு

முருகன் அருள்பாலிக்கும் ஆறுபடை வீடுகளில் திருப்பரங்குன்றம், பழமுதிர்ச்சோலை இரண்டும் மதுரையின் புறத்தே அமைந்திருந்தாலும், இப்பகுதி சிற்றூர் மக்கள் முருகனை நாட்டுப்புறத் தெய்வ வழிபாட்டுக் கூறுகளுடனே வழிபடுகின்றனர். அழகர் கோயில் வைணவத் தலமாக விளங்கியபோதும் அங்குள்ள திருமாலைக் கள்ளழகர் என்றே வழிபடுகின்றனர். சிற்றூர் தெய்வமான ‘பாண்டிமுனி’ வழிபாடு, இப்பகுதி மக்களால் விமரிசையாக நிகழ்த்தப்படுகின்றது ஆகம மரபிற்குட்பட்ட அம்மன் தெய்வங்கள் பல இருந்தபோதிலும் ராக்கச்சி அம்மன், காளியம்மன், செல்லியம்மன், மாரியம்மன் போன்ற அம்மன் தெய்வங்கள் மிகுதியாக வழிபடு தெய்வங்களாக இருக்கின்றன. இவ்வழிபாடு இனக்குழு வழிச் சமூகமான தாய்த்தெய்வ வழிபாட்டின் மரபுத் தொடர்ச்சியாகும். ஆண், பெண் தெய்வங்களின் வழிபாடுகள், விழாக்களில் ஆடு, சேவல், கோழி, முட்டை போன்ற அசைவப் படையல் மிகுதியாக இடம்பெறுகின்றன.

### சாமியாட்டம்

தமிழகச் சிற்றூர்களில் வேளாண்மைக்குப் பிறகான ஓய்வுக் காலங்களில் மாசிக்களரி, பங்குனிப் பொங்கல், சித்திரைத் திருவிழா, வைகாசிக் கொடை என அவ்வவ் பகுதிகளில் வழிபாடுகளை மரபுத் தளத்திலிருந்து நிகழ்த்துவதைக் காணமுடிகிறது. வேலன் வெறியாட்டின் நீட்சியாக இன்றைய சாமியாட்டம் பங்காளி இன ஊர்த்தெய்வக் கோயில்களில் நிகழ்த்தப்படுகின்றது. ஆண்டுக்கு ஒருமுறை குறிப்பிட்ட நாள்களில் இச்சாமியாட்ட வழிபாடு நிகழ்த்தப்படுகின்றது. கல்வி, பொருளாதாரம், புலம்பெயர்வு, நாகரிகம் எனச் சிற்றூர் மக்கள் பல நிலைகளில் மாற்றம் பெற்றும் வளர்ச்சியடைந்தும் வந்துள்ள நிலையிலும் தத்தம் குல, இன, பங்காளி, ஊர்த் தெய்வங்களை முன்னோர் நிகழ்த்திய வழிமுறைகளிலே அப்படியே நிகழ்த்துகின்றனர்.

ஊரில் பங்காளிகள் ஒன்றுகூடி சிவன் ராத்திரி எனும் மாசிக் களரியின் போது இரவு வையையிலிருந்து கரகம் எடுத்துச் சாமியாட்டத்துடன் இரவு முழுவதும் வழிபாடு நிகழ்த்துகின்றனர். மறுநாட்காலை ஊர்க்காவல் தெய்வங்களான முனியாண்டி, கருப்பர், கொம்பையா ஆகிய தெய்வங்களுக்குக் கிடாய் என்னும் ஆடு அறுத்து ரத்தப்பலி கொடுத்து பொங்கல் வைத்து வழிபாடு நிகழ்த்துவர். இவ்வழிபாட்டை உற்றுநோக்கியும், வினாக்கள் வழிச் சேகரித்தபொழுது கிடைத்தத் தகவல்களின் வழியாகவும் சாமியாட்டம் சுட்டப்படுகின்றது.

**படையல்**

கோயில் கட்டித் தெய்வத்தை வைத்து வழிபடுவதினும் மிக இன்றியமையாதது அத்தெய்வத்திற்குக் குறிப்பிட்ட காலங்களில் உரிய படையல்கள் படைத்து வழிபடுவதாகும். அவ்வாறு படையலுடன் வழிபடவில்லையெனில் அது தெய்வக்குற்றமாகி, கட்டியவர் தண்டனைக்குள்ளாவர் என்பது நம்பிக்கையாகும். இங்குள்ள சிறுமரபுத் தெய்வ வழிபாட்டில் ஆண், பெண் தெய்வங்களுக்கு மறி (ஆடு) அறுத்து ரத்தப்பலி கொடுத்தல், ரத்தத்தில் சோற்றைக் கலந்து எறி சோறு கொடுத்தல், இறந்து தெய்வமானவர் அவர் உயிருடன் இருந்த காலத்தில் பயன்படுத்திய பொருட்கள், உண்ட உணவுகளைப் படைத்தல் வழிபாட்டில் இன்றளவும் தொடர்கின்றன.

முருகன், கருப்பர், முனியாண்டி, கொம்பையா, ராக்கச்சி, இருளாயி, காளி போன்ற தெய்வங்களின் வழிபாடு, சாமியாட்டங்களில் ஆட்டுக்கிடாய், சேவல் தலை, ரத்தம், கருவாடு, மதுவகைகள், சுருட்டு, புகையிலை, உணவுகள், சூட்டான் போன்ற பொருள்களைப் படைத்து வழிபடுகின்றனர். பெண் தெய்வங்களுக்குச் சுளகு, பெட்டி, காதோலை, கருகமணி, வளையல், தென்னம் பாளை, மட்கலயம், படி, மரக்கால், தடி முதலிய புழங்கிய பொருட்கள் வைத்து வழிபடுகின்றனர்.

**பிடிமண் எடுத்தல்**

போர், தொழில்கள், பங்காளிச் சண்டை போன்ற காரணங்களால் ஊரை விட்டு, குடியிருப்பை நீங்கி வேற்று ஊர்களுக்குப் புலம்பெயர்ந்தவர்கள் தங்கள் முன்னோர்கள் கட்டிய ஊரிலுள்ள கோயிலுக்கு வர இயலாதவர்கள், தங்கள் வசிப்பிடத்தில் தமது குல, இன, பங்காளித் தெய்வங்களுக்குக் கோயில் கட்டி வழிபடுவதற்குப் பழைய ஊர் அல்லது கோயிலிலிருந்து மண்ணை எடுத்துச் சென்று கோயிலமைத்து வழிபடப்படும் தெய்வத்தைப் பிடிமண் தெய்வம் என்பர். குலதெய்வம் கனவில் வந்து சொல்லியது, குறிகேட்டல், பூக்கட்டிப் போடுதல், திருவுளச்சீட்டு வழி பிடிமண் எடுத்துக் கோயில் கட்டியதாகவும் கூறுகின்றனர். இதற்குக் ~குடி எழுப்புதல்| என்கிறார் ச.கணபதி ராமன். பிடிமண் கோயிலருகில் எடுக்கும்பொழுது பசுமாட்டின் கோமியம், பால், எலுமிச்சம்பழம், முட்டை, மல்லிகைப் பூ, தேங்காய், பழம் வைத்து வழிபாடு நிகழ்த்தி மண் எடுத்துப் புதிய மண்கலயத்தில் வைத்துக்கொண்டு சென்று தாம் குடியிருக்கும் இடத்தில் இத்திருக்கோயிலைக் கட்டும் மரபு இன்றும் தொடர்கின்றது.

**குழி வழிபாடு**

இப்பகுதியில் இறந்தவர்களை எரிப்பதின்றும் புதைப்பதையே சிறந்ததாகக் கருதிச் செய்கின்றனர். குறிப்பாக சாமியாடிகள், பூசாரிகள், அருள்வாக்குச் சொல்வோர், நோய், விபத்துக்கள், வயது முதிர்ந்த இயற்கையாக மரணம் அடைந்தவர்களைப் புதைப்பதன்மூலம் அவர்கள் சமாதித் தெய்வமாகி விட்டனர் என நம்புகின்றனர். குழியில், சமாதியில் அடக்கம் செய்யப்பட்டவர்களின் குழியை ஆண்டுதோறும் அவர்களின் நினைவு நாள், தை வருடப் பிறப்பு, சித்திரை மாத முதல் நாள் குழி முழுகுதல் என்னும் வழிபாட்டைச் செய்கின்றனர். இறந்தவரைப் புதைத்த குழியுடன் தலைப்பகுதியில் கல் நட்டு வைக்கப்படும். இதைப் போர், நாட்டின் எல்லைப் பாதுகாப்பு, ஊர்க்காவல் போன்றவற்றால் உயிர்த் தியாகம் செய்தவர்களுக்கு வைக்கப்படும் நடுகல் வழிபாட்டின் மரபுத் தொடர்ச்சியாகக் கருதலாம்.

**வளமைச் சடங்குகள்**

மக்கள் நோய்களின்றி மகிழ்ச்சியுடன் வளமையான வாழ்விற்குச் சடங்குகள் துணை செய்வதாக நம்புகின்றனர். பிறப்பு, பூப்பு, திருமணம், இறப்பு ஆகிய நிகழ்வுகளை ஒட்டிப் பல சங்குகளை

நிகழ்த்துகின்றனர். இவற்றுனூடாக வழிபாட்டுச் சடங்குகளும் வளமை நோக்கில் தெய்வங்களை முன்னிறுத்திச் செய்யப்படுகின்றன. முளைப்பாரி, மது எடுத்தல், குதிரை எனும் புரவி எடுப்பு, மழை வேண்டிச் செய்யும் கூட்டான் சோறு எடுத்தல், சித்திரை முதல் நாள் பொன்னேர் பூட்டி உழுதல், விதைத்தல், தலை நடவு என்று குலதெய்வத்திற்குப் பொங்கலிட்டு விளைமுடி வாங்குதல், பிறந்த குழந்தைக்குத் ~தலை மொட்டை| குல தெய்வக் கோயிலில் எடுத்தல், குலதெய்வப் பெயர் வைத்தல், தாய் மாமன் மடியில் வைத்து காது குத்துதல் போன்ற பல சடங்குகள் இப்பகுதியில் வளமையான வாழ்வு நோக்கில் மேற்கொள்ளப் பெறுகின்றன. இச்சடங்குகள் தொன்றுதொட்டு முன்னோர் மரபின் தளத்தில் செய்யப்படுகின்றன. “பண்டைய மக்கள் சடங்காகச் சனங்களை வாழ்க்கையில் நலன்களைப் பெற அவசியமெனக் கருதினர். மழை பெய்யவும், பயிர் வளரவும், காய், கிழங்குகள் கிடைக்கவும், நோய் நொடிகள் வராமல் இருக்கவும் வேட்டையில் விலங்குகள் கிடைக்கவும், புயல் போன்ற இயற்கை விபத்துக்கள் நேராமல் இருக்கவும் பலவகைச் சடங்குகளை நிகழ்த்தினர்” என்கிறார் நா.வானமாமலை (பழங்கதைகளும் பழமொழிகளும், ப.4)

### தொகுப்புரை

நாட்டுப்புற வழிபாடுகளும், விழாக்களும் நவீனங்களின் தாக்கத்துக்கு முற்றிலும் ஆட்படாமல் முன்னோர்களின் வேர், தூர் மரபுகளின் அசைவுகளுடன் முன்னெடுக்கப்பட்டு வருவதை மதுரை வட்டாரத்திலுள்ள சிறுமரபு வழிபாடுகளில் தொடர்வதைக் கள ஆய்வு, உற்று நோக்கல், பேட்டி நிலைகளில் காண முடிகின்றது. மதுரைப் பகுதியைச் சார்ந்தவர் அமெரிக்காவில் மென்பொருள் நிறுவனத்தில் பணிபுரிந்தாலும் தங்கள் குல, இன தெய்வத்தை முன்னோர் மரபை மறக்காமல் சடங்குகள் நிகழ்த்தி மரபு வழி நிகழ்த்தவதைக் காணமுடிகிறது. கல்வி, நவீனங்கள், பொருளாதார முன்னேற்றம், புலம்பெயர்வு போன்றவை நிகழ்ந்தாலும் வழிபாடுகளில் சடங்குகள், சாமியாட்டம் என மரபு நீட்சியாகத் தொடர்கின்றது.